


# வெரோனிக்காவுடன் ஒரு சிலுவைப் பாதை

**எண்ணமும் எழுத்தும்: திருமதி லூசியா மோகன்**

அன்பின் மடல்
**www.anbinmadal.org**

சிலுவைப்பாதை முன்னுரை:
தவக்காலத்தின் வெள்ளிக்கிழமையான இன்று கூடியிருக்கிறோம். மீண்டும் ஒரு தவக்காலம். 365 நாட்களில் வெறும் 40 நாட்கள் மட்டும் அவரது பாடுகளை நினைக்கிறோம், நமக்காக உயிர் துறந்த இயேசுவை நினைக்கிறோம். மீதி 325 நாட்கள்? சிந்திப்போம். நம்மில் பலர் எருசலேம் சென்று இயேசு சிலுவைச் சுமந்து நடந்த பாதையில் பாதம் பதித்து நடந்து வந்திருக்கிறோம். இயேசு வாழ்ந்தக் காலக் கட்டம் தெரியும். அவரது தாய், தந்தை தெரியும். அவரது போதனைகள், சாதனைகள், குணமளித்தது. உயிரளித்தது. பரிவு காட்டியது அனைத்தும் தெரியும். இப்போது இயேசு சாவுக்கு ஒரு மனிதனால் தீர்ப்பிடப் பட்டு அவமானபடுத்த பட்டு, மானங்காக்க உடுத்தியிருந்த துணிக் கிழிப்பட்டு, இரத்தம் சிந்திச் சிலுவையைச் சுமக்கிறார். நாம் இந்த 30 நிமிடத்தை ஒரு காட்சித் தியானம் போல் பார்த்து அவரோரடு நடப்போம். யாரைப் போல்!
பார்வையாளனாகவா, கொக்கரிக்கும் பரிசேயச் சதுசேயக் கூட்டம் போலவா, மகனைப் பலிக் கொடுக்கச் செல்வதைக் காணும் அன்னை மரியாளைப் போலவா? ஏதும் செய்ய இயலா அப்பாவியாய் கூட்டமாகவா, பயந்து ஒளிந்திருந்து வேடிக்கைப் பார்ப்பவராகவா, தன்னால் இயன்றதைத் தைரியமாக, செய்த வெரோனிக்காப் போலவா, சிலுவையை கட்டாயத்தால் சுமந்தச் சீரேன் ஊரானாகிய சீமோனைப் போலவா?
**வெரோனிக்கா எனும் பெண்ணுடன் சிலுவை பாதையை தொடங்குவோம். இந்த வெரோனிக்கா தான் 12 வருடம் இரத்த போக்கினால் அவதி பட்டு அசைக்க முடியாத நம்பிக்கையால் சமூக கட்டுபாடுகளை மறுத்து இறை இயேசுவின் ஆடை நுனியை தொட்டு குணமானவள் என அடையாளம் காட்டப்படுகிறாள்.** அவளது துணிச்சல், நம்பிக்கை, உடல் உபாதையின் கொடுமை, இறைவன் என்னிடமிருந்து வல்லமை வெளியாயிற்றே என்னை தொட்டது யார் என்றதும் முன்வந்த தைரியம். உலகாளும் இறைவன் என்னோடு, என்னை யார் எதிர்க்க முடியும் என்ற இறுமாப்பு, கல்வாரி பாதையில் அத்தனை கூட்டத்தையும் தள்ளி, முன் வந்து இயேசுவின் சேறும், எச்சிலும் வடிந்த முகத்தை அடைக்க தனது துண்டை கொடுக்க இயேசுவும் வாங்கி அவரது முகத்தை அதில் பதிய செய்தார்.

**1844ல் Sr.Marie of St Peter Tours (France) நகரில் வாழ்ந்த ஒரு கார்மல் மடத்தைச் சார்ந்த அருள்சகோதரிக்குத் தோன்றிய இயேசு தன் முகம் பதிந்த தனது ஆடையை காண்பித்து அந்த பக்தியை பரவ செய்தார்.** இந்த சிலுவை பாதையில் முதல் 7 நிலைகள் **வெரோனிக்காவோடும்** மீதி 7 நிலைகள் **அன்னை மரியாளுடன்** தோள் கொடுத்து நிதானமாக நடப்போம்.



## முதல் நிலை :

### இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

***திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து, வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்திறோம். அது ஏனென்றால் உமது பாரமான சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீரே.***

*இயேசு மாசற்ற செம்மறியாய், வாய் திறவாத ஆட்டுக்கு குட்டியாய் பிலாத்தின் முன் நிறுத்தப்படுகிறார். இயேசு மாட்டு கொட்டிலில் மனிதனாக மண்ணில் விழுந்த நிமிடத்திலிருந்து பல முறை தீர்ப்பிடப்படுகிறார். நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ? யோசேப்பின் மகனல்லவோ? அவரை கல்லெறிந்து கொல்ல தீர்மானித்த போது அவர்களிடையே நடந்து மறைந்து போனது என்று பல பல தீர்மானங்கள். பிலாத்து எழுதாத தீர்ப்பை சொல்லுகிறான். கல்தளம் என்ற நடுவர் இருக்கையில் அமர்ந்து சொல்கிறான். யோவான் நற்செய்தி படி அது நண்பகல் வேளை லூக்கா நற்செய்தி 23:4 நான் இவனிடம் குற்றம் ஒன்றும் காணவில்லை என்கிறான். பின் எப்படி சாவுக்கு தீர்ப்பிடுகிறான்? தம் மொழியில் தூக்கு தண்டனை குற்றமற்றவருக்கு தூக்கு ! அன்பு இயேசுவே நாங்கள் வெரோனிக்கா அன்று பதறியதை போல் அநியாய தீர்ப்பால் நீர் சிலுவை பாதையில் அடியெடுத்து வைத்ததை நினைத்து பதறுகிறோம்.*

***செபம்:***

*உன்னை பற்றிக் கொள்ள வேண்டும் இயேசுவே உன்னை தொடர்ந்திட வேண்டும். மனம் மாறிட உதவிடும் இயேசுவே!*

***சிந்தனை:***

*நான் என் அயலானையும், உறவுகளையும் என முகம் தெரியாதவர்களையும் அநியாயமாய் தீர்ப்பிடும் வேளைகளில் எல்லம் இயேசு மீது சிலுவை சுமத்துகிறேன்.*

***எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி எங்கள் மேல் இரக்கமாயிரும். மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் கடவுளின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவுது. ஆமென்.***



## இரண்டாம் நிலை

### இயேசுவின் தோள் மேல் சிலுவை சுமத்துகிறார்கள்.

***திவ்விய இயேசுவே...***

*இயேசுவை அநியாயமாய் தீர்ப்பிட்டு தலைமை குருக்களிடமும் பரிசேயரிடமும் ஒப்புவித்ததும் படை வீரர்கள் அவருக்கு செந்நிற அங்கி அணிவித்து முள் கிரீடம் சுட்டி இதோ யூதர்களின் அரசன் என்று ஏளனம் செய்து அவரது முகத்தில் துப்பி, எலும்பும் ஆணிகளும் கட்டப்பட்ட சாட்டையால் அடித்தார்கள். பின் அவரது உடைகளை அணிவித்து வெளியே இழுத்து வந்து சிலுவையை இயேசுவின் தோள்களில் ஏற்றி சுமக்க செய்து இழுத்து போனார்கள். ஐயோ! உலகாறும் தெய்வத்துக்கே இந்த சோதனை, அவமானம், உடல் உபாதை, சதை பிய்ந்து ரத்தகளறியாக, தோளில் பாரமான சிலுவை.*

*எருசலேம் நகர மக்களுடனும் மாதாவுடனும் வெரோணிக்காளும் நடந்து வருகிறார்கள். தன்னை வியாதிலிருந்தும், வலியிலிருந்தும், ஊராரின் ஏளனத்திலிருந்தும், தீட்டுபட்டவள் சமூகத்தில் விலக்கப்பட்டவளை தன்னை மீட்ட தேவனை நன்றி நிறைந்த மனதோடும் ஏதும் செய்ய இயலாத வேதனையோடும் பின் தொடருகிறார்கள்.*

***செபம்:***

*அன்பு இயேசுவே எனது நிகழ்கால, கடந்த கால, வரும் கால பாவங்களுக்காக தோலைக் கிழிந்த பெரும் காயமாக மாறி போன நிலையிலும் பரிகாரம் செய்து என்னை மீட்ட இறைவனை நன்றியோடு நினைத்து எனது பாவ சுமைகளை குறைத்து இனிமேல் எந்நிலையிலும் பாவம் செய்வதில்லை என்று உறுதி செய்கிறேன்.*

***சிந்தனை:***

*எனக்காக சிலுவை சுமந்த இயேசுவை நன்றியோடு நினைக்கிறேனா? எனது அடுத்திருப்பவர்களுக்கு நல்லது செய்ய என்றால் முடியுமென்றாலும் கள்வரிடம் அகப்பட்டு குற்றுயிரும் குலையுருமாக கிடந்தவரை தாண்டி சென்ற குருவை போல, லேவியரை போல கண்டுக்காமல் தாண்டி செல்கிறேனா? அல்லது சமாரியனை போல உதவி செய்கிறேனா?*



## மூன்றாம் நிலை

### இயேசுவின் சிலுவையின் பாரத்தால் முதல் முறை தரையில் விழுகிறார்.

***திவ்விய இயேசுவே…***

*பிதாவின் வலப்புறம் வீற்றிருக்கும் என் இனிய இயேசு, மனிதன் மிருகமாக மாறி போன மனிதர்களால் அடித்து வைக்கப்படுகிறார். சாட்டையால் முதுகெல்லாம் அடிப்பட்டு சதை கிழிந்து தொங்க, தலையில் முள்முடி வைத்து கம்புகளால் அடிக்கப்பட்டு அழகிய முகம் இரத்ததால் தோய்ந்து மனமும், உடலும் நனைந்து தடுமாறி, பாரமான சிலுவை சுமந்து நடக்கிறார். சிலுவையின் பாரம், உடலின் இயலாமை, நடை தடுமாறி கிழே விழுகிறார். எருசலேம் நகர பெண்களும் இயேசுவால் நலம் பெற்றவர்களும், பலம் பெற்றவர்களும் அவர் பின்னே அழுது புலம்பி கொண்டு வருகிறார்கள். இயேசு நம்மை அன்பு செய்தாரே, பரிவு காட்டினாரே, அள்ளி அனைத்தாரே இதே அந்த தேவன் மண்ணில் விழுந்து கிடக்கிறார். நம்மீது கொண்ட அன்பால் அநியாய கொலைக்கு ஆளாகிறார்.*

***செபம்:***

*அன்பு இயேசுவே! அன்பை மட்டுமே எங்களுக்கு போதித்தீர் கிடைத்த நன்மைகளையும், நீர் எனக்கு காண்பித்த பேரிக்கத்தையும், அதிக பரிவையும் நாங்கள் உணர்ந்து ஏற்றுக் கொண்டு உமக்கு நன்றியோடு வாழ்வோம்.*

***சிந்தனை:***

*சிறிது நாட்களுக்கு முன் கல்லூரி மாணவிகள் தங்கள் முடியை கத்தரித்து புற்று நோயாளிகளுக்கு கொடுத்ததை பத்திரிகைகளில் வாசித்தோம். புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதற்கான மருத்துவ உதவி பெறும்போது முடி கிழந்து விடுவார்கள். அவர்களுக்கு உதவதான் இந்த இளம் பெண்கள் தங்கள் முடியை தானம் செய்தார்கள். நான் என் சக மனிதருக்கு எதுவும் எதிர் பாராது பரிவு கொண்டு இரங்க, பகிர தயாரா இருக்கிறேனா?*



## நான்காம் நிலை

**இயேசு தமது தாயானா சந்திக்கிறார்.**

***திவ்விய இயேசுவே....***

*தேவ மாதா தான் ஈன்றெடுத்த அன்பு மகனை, மேலான பிள்ளையை உடலெல்லாம் கிழிந்து, இரத்தம் வழிய, முகமெல்லாம் சோர்ந்து, கண்கள் பஞ்சடைந்து, சிலுவை சுமந்த தோள்களில் பெரிய ஆழமான காயத்துடன் சந்திக்கிறார்கள். கையாளின் அரண்மனைக்கு அருகில் மிகுந்த சிரமத்துக்கு பிறகு தன் மகனை அருகில் சந்திக்கிறார்கள். அழுது சிவந்த கண்கள் உடல் பதற தன் மகனை ஆவி சேர்த்து அனைத்து கொள்கிறார்கள். படைவீரர்கள் அந்த தாயையும் விட்டு வைக்கவில்லை. இயேசுவை சிலுவையில் அறைய அவர்கள் உபயோகிக்க போகும் பெரிய ஆணிகளை அவரது கண்முன் காட்டியும் கோஷங்கள் எழுப்பியும் கேலி செய்கிறார்கள். மாதாவின் உதடுகள் இறைவன் சித்தம் நிறைவேறட்டும், மகனே மகனே என்று அரற்றுகின்றன.*

***செபம்:***

*எங்களுக்காக பெரும் பார சிலுவையை சுமந்த இயேசுவே! எங்களுடைய துன்ப வேளைகளிலும், மனம்கலங்கி, வழி தெரியாது தவிக்கும் வேளைகளிலும் இறைவா உமது சித்தம் நிறைவேறுக என்று உமது வழி நடக்க எங்களுக்கு உதவியருளும்.*

***சிந்தனை:***

*எனது வாழ்விலும் இயேசுவை நேரில் சந்திக்கும் தருணங்கள் பல உண்டு. அது வயோதிக்கத்தால் துன்புறுவோராக இருக்கலாம், நோயில் உழலுவோராய் இருக்கலாம், சந்தர்ப்பத்தால் கட்டுண்டவர்களாயிருக்கலாம், வறுமையால், கடனால் பாதிக்கப்பட்டவர்களாயிருக்கலாம், என்னால் முடிந்த பொருளுதவி, ஆலோசனை, உடல் உதவி, சிறிய ஆறுதலான வார்த்தைகள், ஒரு சிறிய பிள்ளைகள் என தோள் கொடுக்க தயாராக இருக்கிறேனா?*



## ஐந்தாம் நிலை

**இயேசு சிலுவையை சுமந்ததற்கு சீமோன் உதவி செய்கிறார்.**

***திவ்விய இயேசுவே....***

*இயேசு சிலுவை பாதையில் இரத்தம் மிகுதியாக வெளியேறிதாலும், சாட்டையடிகளால் தசை கிழிந்தும், சிலுவை சுமந்ததால் தோளில் ஏற்பட்ட ஆழமான காயத்தாலும் பலவீனமாக, சக்தி இழந்து போவது கண்ட படை வீரர்கள் அவர் சிலுவையில் அறையும் வரை இயேசுவை உயிரோடு வைத்திருக்க வேண்டும் என்பதற்காக வயலிருந்து திரும்பி கொண்டிருந்த சீரேன் ஊரானான சீமோனை பிடித்து சிலுவை சுமக்க கட்டாயப்படுத்துகிறார்கள். இந்த சீமோன் சீரேன், இன்றைய லிபியாவை சேர்ந்தவர் அலெக்ஸான்டர், ரூபன் இவர்களின் தகப்பனார் ரோமன் 16:13 பவுலடிகளார் இந்த சீமோனுடைய மனைவி எனது தாய்க்கு ஒப்பானவள் என்கிறார். இவர் அந்தியோக்கு ஆதி கிறிஸ்தவர்களில் ஒருவர். இந்த சீமோன் இயேசுவை நேசித்தவராய் இருந்ததால் படை வீரர்கள் இயேசுவின் சிலுவையை சுமக்க நிர்பந்திக்கிறார்கள்.*

***செபம்:***

*அன்பான என் நல்ல தேவனே நான் பல நேரங்களில் என் துன்பங்களை ஏற்று கொள்ள மனமின்றி விலகி போனாலும் உம் அன்பு என்னை வழி நடத்த வேண்டுகிறேன்.*

***சிந்தனை:***

*பலருக்கு தோள் கொடுக்க எனக்கு பலமும், வலிமையும், திளனும், வழியும் பிறந்தாலும் நான் உதவ மறுத்த தருணங்கள் எத்தனை? சிந்திப்போமா?*



## ஆறாம் நிலை

**இயேசுவின் திருமுகத்தை வெரோனிக்காள் துடைக்கிறார்.**

***திவ்விய இயேசுவே....***

*இயேசு களைத்து துவண்டுபோய் நடக்க இயலாது கண்களில் வழிந்த இரத்தம் கண்களை மறைக்க தள்ளாடுகிறார். வெரோனிக்கா எருசலேம் நகர பெண்களோடு அழுத கண்களும் நொந்த மழையாய் இயேசுவை பின் தொடருகிறார். இயேசுவின் முகம் சேறும், எச்சிலுமாக இருக்கிறது. இரத்தம் வழிந்து தாடியில் பட்டு காய்ந்து தாடியே கூர்மையாகி போனது. பார்த்த வெரோனிக்கா, மனம் வெதும்பி, சுற்றுபுறம் மறந்து, கொடிய மனம் படைத்த படை வீரர்களின் அரணையும் மீறி, விரைந்து அவர்களை தாண்டிச் சென்று இயேசுவிடம் துணியை கொடுக்கிறாள். இயேசுவும் துடைத்தார். தனது முகத்தையே அதில் பதித்து கொடையாக கொடுத்தார். வெரோனிக்கா அன்றிலிருந்து சித்திரம் புகைப்படம் இவைகளின் பாதுகாவலியானார்.*

***செபம்:***

*இயேசுவே! உலகில் நடக்கும் அநியாயங்களை வெறும் பார்வையாளனாக, கண்டும், காணாது, என்னை பாதிக்காதவரை பரவாயில்லை என்று இராது அடுத்தவர் துன்பம் கண்டு துடிக்கும் நல்ல மனதை எனக்கு தாரும்.*

***சிந்தனை:***

*அரசியல் காரணங்களுக்காகவும், பிற பல காரணங்களுக்காகவும் கைதிகளாகவும், அகதிகளாகவும், கொலை தண்டனைக்கு ஆளாக்கப்படும் அதை சக மனிதர்களுக்காக நான் என்ன செய்கிறேன்? என்ன செய்ய போகிறேன்?*



## **ஏழாம் நிலை**

### **இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.**

***திவ்விய இயேசுவே....***

*இயேசு வலுவிழந்து நடை தளர்ந்து மீண்டும் கீழே விழுகிறார். கால்கள் மடங்கி பாரமான சிலுவையோடு கரடு முரடான பாறைகள் மீது விழுகிறார். அவர் பின்னால் வரும் அன்பு தாய்க்கும், வெரேனிக்கா, மரிய மதலேனாள், மரியா, குழந்தைகளுக்கும் அந்த சத்தம் இடிபோல் உள்ளத்தில் இறங்குகிறது. ஐயோ! மடமானவனை நடக்கவும், இறந்தவனை எழுப்பவும் வல்ல தேவன், வலுவிழந்து முகம் குப்புற விழுந்து வதை படுகிறாரே என பெருங்குரலெடுத்து ஓலமிட்டு அழுகிறார்கள். அரிய, கொடிய, தீர்கக முடியாத நோய்களோடு வாழ்பவர்களை இந்த இயேசுவை நோக்கி ஒப்புக் கொடுப்போம்.*

***செபம்:***

*இயேசுவே! உடல் உபாதைகளாலும், வயோதிகத்தாலும் உடல் நலிந்து உள்ளம் வலுமின்றி வேதனைப்படும் ஒவ்வொருவரையும் நினைந்து உமது பாதத்தில் வைக்கிறோம். நீரே அவர்களுக்கு சோர்வை நீக்கி ஆற்றுப்படுத்து இந்த துன்பத்தை எதிர் நோக்கும் ஆற்றலை தருவீராக.*

***சிந்தனை:***

*நோயுற்றிருக்கும் எனக்கு தெரிந்த ஒருவருக்கு நான் எவ்வாறு உதவ போகிறேன்? புற்றுநோய், ஆட்டிஸம் போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கும் குடும்பத்தினருக்கு என்னால் ஆறுதல் கொடுக்க முடியுமே, செய்ய முயற்சிப்பேனா? தனிமையில் வாழும் முதியோனா சந்தித்து கொஞ்ச நேரம் அவர்களுடன் செலவிட தயாரா இருக்கிறேனா?*



## எட்டாம் நிலை

### இயேசு அழும் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்.

***திவ்விய இயேசுவே....***

*இயேசு இரண்டு முறை கீழே விழுந்து, எழுந்து சிலுவை சுமந்து செல்லும் பாதையில் எருசலேம் நகர பெண்கள் மாதாவுடனும், இயேசுவினால் குணம் பெற்ற வெரோனிக்கா, பாவங்கள் மன்னிக்கப்பட்ட மதவேனாள், இறந்து உயிர் பெற்ற லாசரின் சகோதரிகள் மார்த்தா மரியாளுடன் அநேக பெண்கள் மாரடித்து அழுது புலம்பிய படி செல்கிறார்கள். இறைவனுக்காக அழும் பெண்கள். இயேசு திரும்பி பார்த்து எனக்காக அல்ல உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்கிறார். இயேசுவின் உணர்வுகள் படைப்புகளின் நலனை சூழ்ந்தே இருக்கிறது. தாய் தனக்காக கண்ணீர் விடுவதை பார்க்கிறார். அவரது மனது அந்த தாய்க்காக தவிக்கிறது. இன்று தங்களது மகனை மகளை நினைந்து கண்ணீர் விடும் ஒவ்வொரு தாய்க்கும் இயேசு தரும் ஆறுதல் மகத்தானது.*

***செபம்:***

*அன்பு இயேசுவே இன்று உலகில் பல தாய்களின் உள்ளம் உடைந்து நடைபிணமாக வாழ்ந்து வருகிறார்கள். பிள்ளைகளின் இழப்பு, பிள்ளைகள் அன்பு செலுத்த மறுப்பது, இயலாமை, இல்லாமை என்ற கொடுமைகள். இயேசுவே இவர்களை உமது கரங்களில் ஒப்பு கொடுக்கிறேன் இவர்களுக்கு ஆறுதல் அளியும்.*

***சிந்தனை:***

*எங்களை சுற்றி வாழும் இளம் தாய்கள், முதிய வயதில் இழப்புகளாலும், இயலாமையாலும், ஒதுக்கப்பட்டும் வாடும் தாய்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை ஆவலாய் செய்ய முன் வருகிறேனா.*




## ஒன்பதாம் நிலை

### இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்.

***திவ்விய இயேசுவே....***

*இயேசு கடைசியாக கீழே விழுகிறார். இன்னும் ஒரு சில அடிகள் தூரமே கல்வாரிக்கு கணக்கிலடங்கா அடிகள், உடம்பிலுள்ள இரத்தம் எல்லாம் காயங்களால் வெளியேறி விட்ட நிலை. ஒரு இறந்த மனிதனை போலும், கந்தை துணியை போலும் துவண்டு விழுகிறார். மாதாவும் மற்றவர்களும் இறந்து விட்டார் என்று நினைத்து கதறுகிறார்கள். ஆனால் கொடிய வடை வீரர்களோ இயேசுவை முரட்டுதனமாக பிடித்து இழுத்து தூக்கி நிறுத்துகிறார்கள். சிலுவை சுமந்து கல்வாரிக்கு இழுத்து செல்ல முயற்சிக்கிறார்கள். இயேசு தன்னையே இழுத்து கொண்டு சிலுவை சுமக்கிறார். நமது பாவங்கள் இயேசுவை இழுத்து தள்ளுகின்றன.*

***செபம்:***

*அன்பான இயேசுவே! என் மீது நீர் கொண்டிருக்கும் பேரன்பும், பேரிரக்கமும் என்னை நெகிழ செய்கிறது. கண்ணீர் நிறைந்த கண்களோடு ஐயா உம்மை புகழ்ந்து நன்றி கூறுகிறேன்.*

***சிந்தனை:***

*பல நேரங்களின் என் துக்கம், என் இழப்பு, எனக்கு நேர்ந்த இடறல், ஏமாற்றம் என்று என்னையே மையப்படுத்தி வாழ்கிறேன். வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் அருகில் சாய்ந்து கொள்ள ஒரு தோள் கிடைக்குமா என்று மயங்கி நிற்போருக்கு கை கொடுக்க, தோள் கொடுக்க எனக்கு மனமிருக்கிறதா? சிந்திப்போம்.*



## பத்தாம் நிலை

### இயேசு துகிலுரியப்படுகிறார்.

***திவ்விய இயேசுவே....***

*இயேசுவுக்கு செந்நிற ஆடை போட்டு ஏளனம் செய்த படை வீரர்கள் இப்போது அவரது ஆடையை அனைவர் முன்னும் கழற்றுகிறார்கள் தங்களுக்குள் பங்குபோட... ஒருவரை இழிவுபடுத்துவதின் உச்சக்கட்டமே அவரை நிர்வாணப்படுத்துவதாகும். படைவீரர்களின் வெறிக்கு இயேசுவும் தப்பவில்லை. அன்னை மரியார் தம் மகனை இக்கோலத்தில் கண்டு துடிதுடித்து போகிறாள். தாய் பார்த்து குளிப்பாட்டி சீராட்டி வளர்த்த மகன் அவமானத்தின் உச்சத்தில், ஐயோ அன்னை மரியின் துக்கத்தை அளவிட முடியுமோ?. ஒழுக்க குறைவால் நடக்கும் பாவங்களால் இயேசு ஒவ்வொரு முறையும் நிர்வாணமாக்கப்படுகிறார்.*

***செபம்:***

*இரக்கத்தின் ஊற்றே இயேசுவே! ஆதரவற்றவர்க்கும், உதவியற்றோர்க்கும் உடனிருக்கும் தெய்வமே, தன்னை தானே காத்து கொள்ளும் திறனின்றி உதவி வேண்டும் ஒவ்வொரு வரையும் உமது கரங்களில் ஒப்படைக்கிறேன். காத்து நடத்துமையா.*

***சிந்தனை:***

*பாவ சந்தர்ப்பங்கள், பாவ நாட்டங்கள், பாவ நிலைகள், பாவத்திற்கு இட்டு செல்லும் நபர்கள் முக்கியமாக ஒழுக்க கேட்டிற்கு இழுக்கும் நபர்கள் இடங்கள், நேரங்களை தவிர்க்கிறேனா? சிந்திப்போம்.*



## பதினோறாம் நிலை

### இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.

***திவ்விய இயேசுவே....***

*இயேசுவை அவர் சுமந்து வந்த சிலுவையிலேயே அறைகிறார்கள். கைகளை விரித்து கால்களை ஒருவர் பிடித்து கொள்ள பெரிய ஆணிகளால் அறைகிறார்கள். ஒவ்வொரு முறை ஆணியில் அடிக்கப்படும் அடியின் ஒலி அன்னை மரியாளின் மற்றும் அங்கு காத்திருக்கும் பெண்களின், சீடர்களின், இயேசுவால் குணமாக்கப்பட்டவர்கள், அவர்களது உறவினர்களின் நெஞ்சங்களில் சம்மட்டியாய் இறங்குகிறது. கடின உள்ள படை வீரர்கள் கால்களை சிறுது மடக்கி ஆணி அறைக்கிறார்கள். மொத்த உடலின் கலையும், இரண்டு கைகளில் தாங்கும் போது தோள்கள் விலகி நுரையீரல், மூச்சுக்காக ஓங்கி, இதயம் துடிக்க மறுத்து கழுத்து உடலில் நிற்க முடியாமல் கவிழ்ந்து ஐயோ இந்த வலிகளையும் அதன் தாக்கத்தையும் என்னவென்று விவரிக்க மரண வலி, வாய் திறவா செம்மறியாய் இயேசு நமக்காக, நமக்காக மட்டுமே இவை அனைத்தும் தாங்குகிறார்.*

***செபம்:***

*வேதனையின் உச்சத்தில் துடிக்கும் என் இயேசுவே எனது பாவங்களுக்காக நீர் அனுபவித்த கொடுமையை நினைத்து கண்ணீர் சிந்தி கதறுகிறேன். இனிமேல் என் பாவ நாட்டங்களை தவிர்த்து உமது மீட்பின் பாதையில் உம்மோடு நடக்க வரம் தாரும்.*

***சிந்தனை:***

*என்னை மீட்பதற்காக எனது பாவங்களை சுமந்த இயேசுவை எவ்வாறு துள்ள துடிக்க சிலுவையில் அறைந்தார்கள் என்றும் அந்த ஆணிகளால் அவருக்கு ஏற்பட்ட காயங்களையும் எனது பாவமான சிலுவையால் இயேசுவுக்கு ஏற்பட்ட தோளின் காயத்தையும் என்றாவது சிந்திருக்கிறேனா?*



## பன்னிரெண்டாம் நிலை

### இயேசு உயிர் துறக்கிறார்.

***திவ்விய இயேசுவே....***

*இயேசு சிலுவையில் உயர்த்தப்படுகிறார். சிலுவையடியில் அன்னை மரியாள். அவளது இதயம் இயேசுவின் துன்பங்களை பார்த்து அதுவும் இறுதி நேர துன்பங்களை கண்டு பதை பதைத்து இதயம் இரண்டாக பிளந்தது போல துன்பம் அடைகிறாள். தலை நிமிர்த்தி தயைனின் நிலையோடு ஒன்றிக்கிறாள். இயேசு மூச்சுக்காக தவிக்கிறார். விலா எலும்புகள் எல்லாம் நொருங்கி உருக்குலைந்த நிலை பேச கூட சக்தியில்லை. அந்நிலையிலும் தன் தாயின் நிலை கண்டு மனமிரங்கி அவளை தன் சீடரிடம் ஒப்படைக்கிறார். அந்த வார்த்தைகளை கேட்ட அன்னை மரியா கதறி நிலை குலைந்து போகிறாள். கடைசி துளி இரத்தமும் தண்ணீரும் வெளியேற படை வீரன் ஈட்டியால் விலாவை குத்தி திறக்கிறான். அன்னை மரியாள் அந்த கடைசி துளி இரத்தத்தையும் தண்ணீரையும் கையில் வாங்கியிருக்க கூடும். ஐயோ 'நான் பெற்ற மகனே' என்று அரற்றி அழுத வண்ணம் சிலுவையை பற்றி கொள்ள இயேசு தன் ஆவியை துறக்கிறார். இயேசுவின் பேரிரக்கம் அங்கு வெளிப்படுகிறது. திருச்சபை அங்கு பிறக்கிறது.*

***செபம்:***

*இயேசுவே! எனக்காக சிலுவை சாவை ஏற்று கொண்ட என் அப்பனே! உமது அன்பை நான் ஆழமாக உணருகிறேன். என் இதயத்தின் ஆழத்திலிருந்து என்னை உமது பிள்ளையாக ஏற்றுக் கொண்டு வழி நடத்தும் பேரன்புக்காக நன்றி கூறுகிறேன். என்னை ஏற்றுக் கொள்ளும்.*

***சிந்தனை:***

*இரத்தம் சிந்தி என்னை மீட்டு தன் பேரிரக்கால் என்னை வழி நடத்தும் என் இனிய இயேசுவுக்கு நான் என்ன செய்ய போகிறேன். சிந்திப்போம்.*



## பதின்மூன்றாம் நிலை

### இயேசுவின் திருஉடலை அன்னையின் மடியில் கடத்துகிறார்கள்.

***திவ்விய இயேசுவே....***

*இயேசுவை ஒரு பெரிய வெள்ளை துணியில் மூன்று அகல துணிகளை இணைத்து அதில் இரண்டு துணிகள் கைகளையும், ஒரு துணி உடலையும் அணைத்தவாறு முடிச்சிடுகிறார்கள். கைகளையும், கால்களையும் துளைத்த ஆணிகளை எடுக்கும் போது ஒவ்வொரு முறை ஆணியில் அடி விழும் சத்தத்தில் அன்னை மரியாள் அதிர்ந்து போகிறாள். நிக்கதேயும் யோசேப்பும் மெதுவாக இயேசுவின் உடல் சிலுவையினின்று மிக மிக மரியாதையுடனும் அன்புடனும் இயேசுவின் உடலை இறக்குகிறார்கள் மாதாவின் மடியில் இயேசு கிடத்தப்படுகிறார். அவரது உடலின் கீழ் ஒரு மெல்லிய வெள்ளை துணி விரிக்கப்பட்டிருக்கிறது. தலையிலிருந்து முள்முடி விலக்கப்பட்டு இரத்தம் துடைத்து முகத்தை துடைத்து வாயையும் நாவும் தாடியிலிருந்து இரத்தமும் துடைக்கப்படுகிறது. இயேசுவில் உடலில் ஒட்டியிருந்த சிலுவை மரத்திலிருந்த விலா எலும்புகள் எல்லாம் எடுக்கப்பட்டு இயேசுவை சுத்தம் செய்கிறார்கள். மதலேனாள் கால்களிலுள்ள காயங்களை கண்ணாலும், தண்ணீராலும் சுத்தம் செய்கிறாள். எருசலேம் நகர பெண்கள் நறுமண பொருட்களை கொடுக்க அன்னை மரியாள் அதை இயேசுவின் காயங்களில் தடவும் போது அன்பும், துயரமும் போட்டி போட்டு கண்ணீர் மாலை மாலையாக கொட்டுகிறது. இயேசுவின் காயங்கள் எல்லாம் பரிமள தைலத்தாலும் நறுமண பொருட்களாலும் தடவிய பின் துணியால் சுற்றப்படுகிறது. அன்னை மரியாள் உயிரில்லாத 33 வயது இளைஞனை மடியில் ஏற்றி சித்தம் கலங்கி நின்றாள்.*

***செபம்:***

*வியாகுலத்தாயே! உமது தியாகத்தின் சிகரமே இந்த கூட்டம் தான். தாயே நாங்கள் உமது மகனை பாவங்களாய் காயப்படுத்தி கொலை செய்தற்காக எம்மை மன்னியும். எம்மீது இரங்கும். உம் திரு மகனிடம் நாங்கள் அவரிடம் திரும்பி வர பரிந்து பேசும்.*

***சிந்தனை:***

*நான் கிறிஸ்துவ போதனைகளை கேட்டு கிறிஸ்துவனாய் வாழ அழைக்கப்பட்டிருப்பதே ஒரு பெரிய கொடை என்பதை உணருகிறேனா? சிந்திப்போம்.*



## பதினான்காம் நிலை

### இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.

***திவ்விய இயேசுவே....***

*இயேசுவின் உடலை துணியால் சுற்றி நிக்கதேமுவும் யோசப்பும் பிடித்து தூக்கி கொள்ள, அன்னை மரியாள், மகதலா மரியா, யோவன்னா, வெரோனிக்கா, யாக்கோபின் தாய் மரியா, சலோமி, சூசன்னா தொடர பின்னால் படை வீரர்கள் வேறு யாரும் வராதபடி அணை கட்டினர். இரண்டு வீரர்கள் விளக்குகளை பிடித்த வண்ணம் இயேசுவின் உடலுக்கு முன்னே செல்கிறார்கள். ஏழு நிமிடங்கள் நடந்த பின் இயேசுவின் உடல் நறுமண தைலங்கள் பொருட்கள் படர்த்தி இருந்த கல்லின் மேல் வைக்கிறார்கள். கல்லறையின் உட்புறம் சுத்தப்படுத்தப் பட்டிருந்தது. ஆண்கள் இயேசுவின் உடலுக்கு வணக்கம் செலுத்தியபின் அன்னை மரியாள் மகனை பார்க்க உள்ளே செல்கிறார்கள். மகனின் தலை பக்கமாய் கவிழ்ந்து கண்ணீராலும் முத்தங்களாலும் மகனை பாசத்துடன் கழுவி வெளியேறியபின் மதலேன் அம்மாள் மலர்களும் மரக்கிளைகளும் கொண்டு வணங்கியப் பின் கைகளை குவித்து அழுதபடி இயேசுவின் பாதத்தை முத்தமிடுகிறார்கள். கல்லறையின் கதவை மூடுகிறார்கள். கதவின் மேல் இரண்டு கம்புகளை சிலுவை குறியாக வைத்தார்கள். தெய்வம் அங்கு தூங்கிற்று.*

***செபம்:*** *கல்லறையில் துயில் கொண்ட இயேசுவே! சாவு முடிவல்ல துவக்கமே என்று எங்களுக்கு காண்பித்தீர். திருமுழுக்கு மூலம் எம் பாவங்களை கழுவி புதுப்பிறப்பாக்கினீர். உமது சாவின் மூலம் எங்கள் பாவங்களை கழுவி பரிசுத்தமாக்கினீர். இந்த பரிசுத்த தனத்தில் நான் என்றும் வாழ்ந்திட வரம் தாரும்.*

***சிந்தனை:*** *ஒரு ஞானியிடம் ஒரு சீடன் வந்தானம். ஞானம் பெற வழி கேட்டானாம். தினமும் நீ சாப்பிடும் காய்களில் ஒன்றை இந்த பையில் போட்டு எங்கு சென்றாலும், அதை சுமந்த செல் என்றாராம். 10 நாட்கள் போயிற்று. சீடன் அவரிடம் வந்து ஐயா! நீங்கள் சொன்னது போல் செய்தேன். அழுகி நாற்றமெடுக்கிறதே சாப்பிட முடியவில்லை, தூங்க முடியவில்லை என்றான். அதை வெளியில் வீசிவிட்டு உன் வழியே போ என்றாராம். ஆம் நான் பொய், குடி, வன்மம், கோபம், பழி உணர்வு, அடுத்து கெடுத்தல், என்று என்னவெல்லாமோ கட்டி முதுகில் சுமந்து கொண்டிருக்கிறேனா அல்லது இயேசு அனைத்தையும் மன்னித்து இரக்கத்தையும், அன்பையும் மட்டுமே அள்ளி தெளித்தது போல வாழ்கிறேனா? சிந்திப்போம்.*